**ARTICLE 45 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00073**
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 113–117
Received: 2 October 2026 • Accepted: 3 October 2026

# சாதி ஆணவத்தின் ஆவணம்- செவ்வருகை

**முனைவர்.முத்துலெட்சுமி தி**[1,*]
[1]இணைப்பேராசிரியர், தமிழ்த் துறை, ம.தி.தா. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி., India
***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர்.முத்துலெட்சுமி தி — tamilseminar12@gmail.com

## ஆய்வுச் சுருக்கம்

சாதி இந்திய பண்பாட்டின் நிறுவனமாக உள்ளது. இங்கு புனிதம்X தீட்டு, மேல்X கீழ் என்பது இயல்பாக இருக்கிறது. சாதிய, பாலின ஒடுக்குமுறை பெண்ணைச் சொத்தாக பார்க்கிறது. அதனைப் பெருமையாகக் கருதும் போக்கு உள்ளது.அது பெருமை அல்ல ஆணவம் என்று மறுக்கும் சிறுகதைகளை 'செவ்வருக்கை'தொகுப்பு. இந்திய சமூகம் பெண்ணை எவ்வளவு அடிமைப்படுத்தி கொலையும் தற்கொலையும் செய்திருக்கிறது. செய்ய வைத்திருக்கிறது என்பதற்கு 'சுதாரி' '-கன்னிக்குழி 'சிறுகதைகள் காட்டுகின்றன. ஐம்பது வருடங்களுக்கும் மேலாக இயங்கும் கழக கட்சிகள் இந்திய சமூக அமைப்பின் சாதிய படிநிலையைத் தக்க வைதத்க்க வைத்திக்கும் ஆணவத்தை 'சாதி நாற்காலி "கழக காவலர் 'விருது கதைகள் சுட்டுகின்றன. இந்தியாவில் சாதி பண்பாட்டு ஒழுக்கமாகவும் பண்பாடும் ஒழுக்கமும் கூட சாதியாலும் கட்டமைக்கப்பட்டிருப்பதை 'நாசுவம் 'கதை சொல்கிறது .சாதியும் மதமும் சாதியும் வர்க்கமும் ஒன்றுக்கொன்று பின்னிப்பிணைந்து இருக்கிறது. கண்ணுக்குத் தெரியாத போதைப் பொருளாக சாதி இங்கு இயல்பாகஇருக்கிறது. சாதி ஒழிப்பு போராட்டத்தில் இலக்கியத்திற்கான பங்காக 'செவ்வருக்கை'யை எம்.எம்.தீம் படைத்திருக்கிறார். நெல்லை மாவட்ட படைப்பாளியான இவர் நெல்லையை மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் சாதி ஆணவம் எவ்வாறு ஒருமைப்பாட்டுடன் செயல்படுகிறது என்பதை ஆவண படுத்துகிறார்.

**Keywords / திறவுச் சொற்கள்:** செவ்வருக்கை -ஆவணம்- ஆணவம்- சாதி- நாசுவம் -சுதாரி- கன்னிக்குழி - அடக்கம் -கை கயிறு- பண்பாடு.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** தி, மு. (2026). சாதி ஆணவத்தின் ஆவணம்- செவ்வருகை. Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

சமூகத்தின் சமநிலையைக் குறைப்பதில் சாதிக்கு முக்கிய பங்கு இருக்கிறது. சாதியைப் பாதுகாக்கும் அமைப்புகள் இந்து மதத்தில் மட்டுமல்ல, பிற மதங்களிலும் தொட்டு தொடர்ந்து படர்ந்து கிடக்கிறது விசாரணைக்கு உட்படுத்தும் கலை இலக்கிய படைப்புகள் குறைவு. செவ்வருக்கை என்னும் சிறுகதை தொகுப்பில்சாதிய பண்பாட்டை ஆவணமாக்குகிறார் எழுத்தாளர் எம். எம்.தீன் அவர்கள். எல்லா ஒடுக்கு முறைகளுக்கும் அடிப்படை சாதியாகத்தான் இந்திய கலாச்சாரத்தில் அமைகிறது என்பதை இயல்பாகவும் எதார்த்தமாகவும் நடப்பியல் நிகழ்வுகளுடன் விவாதத்திற்கு உள்ளாக்குகிறார்.

நெல்லை மாவட்ட படைப்பாளுமைகளில் முக்கியமானவர் எழுத்தாளர் கவிஞர் எம் எம் தீன் ஆவார். எம்ஜிஆர் உடன் பேசிக் கொண்டிருக்கிறேன், தன்னூத்து ராசா, சந்தனத்தம்மை, கல்லறை, யாசகம், செவ்வருக்கை போன்ற குறிப்பிடத்தக்க படைப்புகளைத் தந்தவர் எம். எம். தீன் ஆவார்.

செவ்வருக்கை சிறுகதை தொகுப்பு அண்மையில் வந்த குறிப்பிடத்தக்க நூலாகும். இத்தொகுப்பில் இடம்பெறும் 12 சிறுகதைகளும் தென் மாவட்ட சாதிய ஆணவ பண்பாட்டு பதிவுகளைக் காட்சிப்படுத்துகின்றன.

இன்று பேசப்பட வேண்டிய விவாதத்திற்கும் கேள்விக்கும் உள்ளாக்கப்பட வேண்டிய சாதிய கட்டமைப்பைக் குறித்த வெளிப்படையான எழுத்துக்களாக செவ்வருக்கை அமைகிறது. இந்திய கலாச்சாரத்தில் கட்புலனாகாத சாதிய கருத்தியலின் கோரமுகத்தை ஆவணமாக்குகிறார். காலம் காலமாக ஜாதி எப்படி வேரூன்றி உள்ளது என்பதை இந்த கதைகள் ஆவண படுத்துகின்றன நவீன தொழில்நுட்பங்கள் வளர்ந்த நிலையிலும் சாதியை எப்படி தகவமைத்து வைத்துக் கொள்கிற சமூகப் பண்பாட்டைக் கண் முன் காட்டுகிறார். தென் மாவட்டங்களில் மட்டும் அல்லாமல் தமிழகம் முழுவதும் ஆணவ படுகொலை செய்யப்பட்டு கொலையில் உதித்த தெய்வங்களின் புனைவுகளாக செவ்வருக்கை மற்றும் கன்னிக்குழி கதைகள் அமைகின்றன. இவ்விரண்டு கதைகளும் பல மரபு கதைகளை இன்றைய அரசியல் அதிகார ஆணவ பின்னணியுடன் மறு கட்டமைப்பு செய்கிறார் ஆசிரியர்.

ஒரு காட்டையே பாதுகாக்கும் எளிய உழைக்கும் வர்க்கத்தின் மீது சாதி அதிகார வன்மத்தை உமிழும் கதை செவ்வருக்கை. அரிதாக ஆண்டுக்கு ஒருமுறை காய்க்கும் காவி நிறத்திலானசெவ்வருக்கை ஆண்டைகளுக்கு உரியது. நிறைமாத கர்ப்பிணி வெயிலா அதற்கு ஆசைப்பட அண்ணன் மாடப்புலையன், கணவன் ஆத்திப் புலையன் ஆகியோர் அந்தச் செவ்வருக்கையைப்பறித்து கொண்டு வந்து தர அனைவரும் சாப்பிட்டு விடுகின்றனர் .இதனை அறிந்த பண்ணையார் ஆத்திப்புலையனையும் வெயிலாவையும் கொலை செய்ய தப்பிய மாடபுலையன் தன் தங்கை மகன் செங்காடனை வளர்த்து பண்ணையார்களைக் கொல்ல அவர்கள் பதிலுக்கு மாமனையும் மருமகனையும் சூழ்ச்சியில் கொல்கின்றனர். அவர்களை குல சாமிகளாகவும் பண்ணையார்கள் குடும்பத்தினர் வணங்கி வருகின்றனர். இப்போதும் தங்களுக்கு கீழான பகை சாதிகள் மீது தாக்குதல் தொடுக்க செங்காடன் குல தெய்வங்களை வணங்கி உத்தரவு வாங்காமல் செல்வதில்லை "செங்காடனும் மற்ற குல தெய்வங்களும் பலியை மறந்து சமாதானம் ஆகியோர்களை கண்டு பயந்தோ சிரித்தபடியே உத்தரவு கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள்" (ப.25) என்ற கதை முடிவு சாதிய பண்பாட்டின் அதிகார முகத்தை எப்படி நாட்டார் வழிபாடு, கலாச்சாரம், நம்பிக்கைகள் மூடி மறைத்து இயல்பாக்குகின்றன என்பதைப் பதிவு செய்கிறது.

'சுதாரி'கதை அலைகுடிகளின் கதை. காதலின் பெயரில் ஏமாறும் ஒரு அழகிய நரிக்குறவ பெண்ணின் தற்கொலை கதை. தன் விருப்பத்தை வெளிப்படுத்தும் பெண் எப்படி பெற்றவர்களாலும் ஈவு இரக்கமில்லாமல் கைவிடப்படுகிறாள் .அவளையபெற்றோரும் உற்றாரும் சந்தேகிப்பதும் நிராதரவாக விடுவதும் தான் சாதி இனக்குழு தன் பண்பாட்டைக் காக்கும் நடைமுறையாக இருப்பதைப் பதிவு செய்கிறார். சாதியப் பண்பாட்டைச் சுமக்க வேண்டியது பெண்ணின் மனமும் உடலும் தான் என்று திணிக்கப்படும் கதை 'கன்னிக்குழி '. ஐந்து அண்ணன்களால் பாராட்டி சீராட்டி வளர்க்க பெறும் பொன்னம்மாவின் மீது சந்தேகம் கொண்டு உயிரோடு பொன்னம்மாவைப் புதைத்து கொல்லும் வன்மத்தை ஆவண

படுத்துகிறார். தமிழகம் முழுவதும் பல இடைநிலை சாதிகளிடம் இந்தக் கதையைப் பரவலாகக்கேட்கலாம். அந்தப் பெண் இறந்த பிறகு அவர்கள் கற்பனை செய்தது போல எந்த ராஜாவும் ஜமீனோ குதிரையிலோ யானையிலோ பெண் கேட்டு வரவில்லை என்ற கதை கூறு தான் பெண்கள் மீதான இந்த வன்முறையை வெளிப்படுத்துகிறது.

இந்து மதத்தில் மட்டுமல்ல, இங்கு வந்து சேர்ந்த மதங்களைத் தழுவியவர்களிடமும் சாதி எப்படி பரவி வேரூன்றி உள்ளது என்பதைப் பதிவு செய்வதே 'நாசுவம்'மற்றும் 'ஊரு ஒப்பாது'கதைகளாகும். நான் சுகம் கதை கல்வி தொழில் நுட்ப வளர்ச்சி போன்ற கால மாற்றங்கள் ஏற்பட்டாலும் மக்கள் மனதில் பரவி கிடக்கும் சாதியை ஒரு ஒடுக்கப்பட்ட குடியானவன் ஏற்றே ஆக வேண்டியுள்ளது என்பதை இஸ்லாமிய சமூக பின்னணியை கொண்டு விளக்குகிறார். கிறித்தவ பக்திமான்களாகிய இரு குடும்பத்தினரும் தங்கள் மகனுக்கும் மகளுக்கும் திருமணம் செய்ய விழைகின்றனர். மாப்பிள்ளை வீட்டின் சாதி தெரிந்து போக திருமணப் பேச்சை நாசுக்காக நிறுத்துகின்றனர் பெண் வீட்டார்.

கணினி வேலை, கைநிறைய ஊதியம் ,வசதி ,வாய்ப்புகள் இருந்தும் சகரியாவின் திருமண ஏற்பாடு அவன் சாதி தெரிந்ததும் நின்று போகிறது. கிறிஸ்தவ சபையில் சாதி இல்லை என்பது நடைமுறையில் இல்லை என்கிற ஆவணம் தான் 'ஊரு ஒப்பாது 'கதை வாழும் போது தான் சாதிய பாகுபாடு என்றால் ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்தவர்கள் பிணத்தைக் கொண்டு செல்வதிலும் அதை அடக்கம் செய்வதிலும் இன்றும் தொடரும் ஆணவத்தை, இழிவைப் பேசும் கதை 'பொண அடக்கம் 'கதையாகும். காதல் இணையர்கள் தங்கபாண்டியனும் கீதாவும் தற்கொலை செய்து கொள்கின்றனர் .பிணத்தை வாங்க இரு தரப்பினரும் மறுக்கின்றனர். தங்கபாண்டியன் பிணத்தை அதே சாதியைச் சேர்ந்த காவல் ஆய்வாளர் மரியாதையுடன் நல்லடக்கம் செய்ய, தலித் சமூகத்தைச் சார்ந்த கீதாவின் உடல் அடக்கம் கால்வாயின் ஓரத்தில் நடக்கிறது. குழி தோண்டி இறக்கி போட்டோ எடுத்துக் கொள்கின்றனர் பின் பழைய இடம் தெரியாமல் மூடப்பட்டு விடுகிறது. அனாதையாக விடப்பட்ட தங்கப்பாவின் உடலை காவல்துறையினர் எப்படி மரியாதையுடன் அடக்கம் செய்கின்றனர் என்று காணொலிகள் மெச்சின. பதிலுக்கு ஒடுக்கப்பட்ட சாதியைச் சேர்ந்த பெண் எங்கு, எப்படி அடக்கப்பட்டாள் என்று தெரியாமல் போனது குறித்தும் சரம் மாறியாகப் பேசிய காணொளியும் வருகிறது. அடுத்த ஒரு மணி நேரத்தில் அது முடக்கவும் படுகிறது.தங்கப்பாவின் அடக்கத்தலம் பெரும் மரியாதைக்குரியதாக மாறிக் கொண்டிருந்தது. இந்தக் கதை மக்கள் வழக்கறிஞர் தோழர் பா. ப. மோகன் அவர்கள் ஆசிரியரிடம் பகிர்ந்த உண்மை கதையாக அமைந்து ஆவணம் ஆகிறது.

'கழக காவலர் விருது'என்கிற கதை ஐம்பது ஆண்டுகளாக சுயமரியாதை பேசி சாதி அடையாளத்தைத் துறந்ததாக நம்பும் ஒரு சராசரி தொண்டர் பைந்தமிழ் தாசனுக்கு வழங்கப்படுகிறது கழக காவலர் விருது. சாதி அடையாளத்திற்காக மட்டுமே கட்சி தலைமை வழங்கும் விருதின் அதிகார தலைமையை விமர்சிக்கிறது. சாதி மறுப்பு பேசிய சுயமரியாதை கொள்கைகளை ஏற்றுக்கொண்ட திராவிடக் கட்சிகளின் அதிகாரத் தலைமை ஆதிக்க சாதிகளின் கையில்

இருப்பதை ஆவணப்படுத்தும் சிறந்த கதை 'கழக காவலர் விருது'

கதை.

இரண்டு இசை கலைஞர்கள் காதலில் கலந்து ஊரை விட்டு வந்து திருமணம் முடித்து கனவுகளோடும் வாழ்க்கையோடும் போராடிக் கொண்டிருக்க, மறுபுறம் ஆணவக் கொலை பயம் அவர்களை எப்படி துரத்துகிறது என்பதை படம் பிடிக்கிறார் ஆசிரியர் .தேடி வந்து கொலை செய்யும் விரோதம் ,பெற்ற பிள்ளைகளையும் கொல்லும் வன்மம் எல்லாம் சாதிக்கு தான் இருக்கிறது என்பதை ஆவணம் செய்கிறது 'பாடும் துண்டு நிலா 'கதை.' கல்வி நிறுவனங்களில் வண்ணக் கயிறு, பொட்டு, சாதி மெல்லிசை பாடல்கள் என்று பள்ளிகளிலேயே அடையாள அரசியல் தொடங்கி விடும் போக்கை கதையாக்குறார். 'கை கயிறு 'கதை நாங்குநேரி சின்னதுரை என்ற மாணவன் சாதிய தாக்குதலுக்கு ஆளான பின்னணியைக் கொண்டுள்ளது. இந்த வழக்கின் விசாரணையில் அதிகாரிகள் தலைமை ஆசிரியரைக் காப்பாற்றுவதில் ஒரே சாதி உணர்வு எப்படி வேலை செய்கிறது என்பதை ஆவணம் செய்கிறார் ஆசிரியர். குழந்தைகள் கையில் கயிறு கட்டி சாதி அடையாள அரசியலை வெளிப்படுத்துகின்றனர் என்றால் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டியவர்களின் மனதில் எப்படி சாதிப் பற்று மேலோங்கி இருக்கிறது என்பதை இக்கதை சுட்டுகிறது.

நீண்ட காலத்திற்குப் பிறகு ஊராட்சி பதவிகள் தலித் மக்களுக்கு ஒதுக்கப்படும் போது அதையும் மாற்று முறையில் கைப்பற்றிக் கொள்ளும் நூதன அவலத்தை ஆவணம் செய்கிறது 'பட்டத்தியின் கதை'. தற்சார்பும் சுயமரியாதையும் இல்லாத 'பட்டத்தியின் கதை 'க்கு நேர் மாறாக அமைகிறது 'சாதி நாற்காலி'கதை. சமூக நீதி என்று ஊராட்சி மற்றும் ஊராட்சி பதவிகளில் எல்லா சமூகத்தினரும் பங்களிப்பு வழங்க இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது. நடைமுறையில் ஆதிக்க சாதியினரின் அதிகாரத்தை ஒடுக்கப்பட்ட மக்கள் எப்படி எதிர்கொள்கின்றனர் என்ற ஆவணம் தான் சாதி நாற்காலி. அருந்ததியர் சமூகத்தைச் சேர்ந்த ஹேமா ஊராட்சி பொறுப்புக்கு வரும்பொழுது சாதி வன்மதால் கடுமையாகத் தாக்கப்படுகிறார். மீண்டு வந்து அவள் ஊராட்சி மன்ற அலுவலகத்தில் கொடியேற்றி உரை நிகழ்த்துகிறார். ஊர் மக்கள் ஹேமாவிற்கு மாவட்ட ஆட்சியர் துப்பாக்கி லைசென்ஸ் வழங்கியிருப்பதாகவும் எப்போதும் இடுப்பில் ரிவால்வர் வைத்திருப்பதாகவும் ஊரில் பேசிக்கொண்டனர் என்ற கதை முடிவு சிறந்த ஆவணமாகும். இக்கதையின் ஹேமா பாத்திரம் துணிச்சலும் தன்னம்பிக்கையும் சுயமரியாதையும் கொண்ட பெண்ணாக கட்டமைக்கப்படுவது சிறப்பு. ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கு இடையே இருக்கும் உள் முரண்பாட்டைப் பேசும் சிறுகதை 'வன்மப்பழி '.ஆசிரியரே கதை சொல்லியாக இக்கதையைப் பதிவு செய்கிறார். ஒரு வழக்கறிஞராக ஆசிரியர் சந்தித்த வழக்கின் அடிப்படையில் இக்கதை அமைகிறது.

"சமூகம் தன்னைச் சமநிலைப்படுத்திக் கொள்ள என்றும் விரும்புவதில்லை .அழிந்து போன அடையாளங்கள் நெஞ்சில் சுமந்து கொண்டு திரியும். இன்னும் சாதியின் ஆழமான வேர் எல்லா பிடிமானங்களையும் விட்டு விடவில்லை" (ப152)என்ற கூற்றை நிரூபிக்கும் வகையில் இவரது அனைத்து கதைகளுமே அமைந்துள்ளன.நெல்லை மாவட்ட எழுத்தாளரான எம். எம். தீன் குறிப்பாக நெல்லையிலும் பரவலாக தமிழகத்திலும் இருக்கும் சாதி ஆதிக்க அதிகார ஆணவ முகங்களை

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

ஆவணங்களாகவே பதிவு செய்கிறார். பண்பாடும் கலாச்சாரமும் சாதியாக இருப்பது களையப்பட்டு சமத்துவ, சமநீதி நோக்கிய பண்பாட்டை முன்வைக்கும் சிறந்த படைப்பு செவ்வருக்கை.

© 2026 முனைவர்.முத்துலெட்சுமி தி. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..